செ.வெ.எண் : 12 நாள் : 05.06.2021

# தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு...

*************************

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் இன்று (05.06.2021) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு இ.ஆ.ப, அவர்கள் கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளாக வைரஸ் தொற்று பரவலை தடுத்தல், கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணித்தல், தேவைகளின் அடிப்படையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதிய சிறப்பு சிகிச்சை மையங்கள் மற்றும் ஆக்சிஜன் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் தொற்று கண்டறியப்படுபவர்களை அவர்கள் சார்ந்த பகுதிகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களிலும், கிராம அளவிலான குழுக்கள் அமைத்து வீடுகள் தோறும் கண்காணிப்பு பணிகளை விரிவுபடுத்துதல், என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், சென்னைக்கு அடுத்தப்படியான மக்கள் தொகை அதிகம் கொண்ட மாவட்டம் என்பதால் தமிழ்நாடு அளவில் வைரஸ் தொற்று பரவல் அதிகளவில் இருந்து வந்தது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு நேரடியாக வருகைபுரிந்து வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டதுடன், பணிகளை தீவிரப்படுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளின் விளைவாக தற்போது புதியத் தொற்று எண்ணிக்கை குறைந்து, குணமடைந்து வீடு திரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அதன்தொடர்ச்சியாக இன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றும் ஏற்படுத்த வேண்டிய மருத்துக்கட்டமைப்புகள் குறித்தும், அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு, ஆக்சிஜன் செறிவூட்டிகளின் தேவை, கொரோனா தடுப்பு கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடு, மாவட்டம் முழுவதிலும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதின் தற்போதைய நிலை, கிராம அளவிலான குழுக்கள் மூலம் நடத்தப்பட்ட (Door to Door Survey) கண்காணிப்பு பணி உள்ளிட்ட விவரங்கள்

குறித்து கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கள் கண்டறியப்படுபவர்களை அவர்கள் சார்ந்த பகுதிகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்கும் வகையில் ஆக்சிஜன் வசதிகள் ஏற்படுத்தப்பட்ட படுக்கைகளுடன் கூடிய பல்வேறு சிறப்பு சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகளே கொரோனா தொற்றிலிருந்து ஒவ்வொருவரையும் காக்கும் கேடயமாக விளங்குவதால், பொதுமக்களிடத்தில் தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். அதுபோலவே பொது வெளியில் முகக்கவசம் அணிவதையும், சமூக இடைவெளி கடைபிடிப்பதையும் தவறாது பின்பற்றிட வேண்டும். அத்தியாவசிய காரணங்களைத்தவிர பிற காரணங்களுக்கு வெளியில் செல்வதை பொதுமக்கள் தவிர்த்திட வேண்டும்.

மேலும், கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவர்களுக்கு உடனடி அவசர உதவி அளிக்கும் வகையில் சென்னையில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டது போலவே, அனைத்து மாவட்டங்களிலும் அமைத்திட அறிவுறுத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றது.

மேலும், தினசரி பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உச்சமடைந்து வந்த நிலையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் பலனாக கடந்த சில தினங்கள் தொற்றால் பாதிப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இனி வரும் நாட்காளில் கொரோனா தொற்று பரவல் முற்றிலும்

குறைந்து தொற்றில்லா தமிழகம் என்ற நிலையை இலக்காக கொண்டு அனைத்து அலுவலர்களும் பணியாற்றிட வேண்டும் என தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக கொடிசியா A-அரங்கில் அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய கூடுதல் படுக்கை வசதிகளையும், அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு வசதிகளை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ்ஆய்வில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., கொரோனா தொற்று தடுப்பு பணிகளுக்கான கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் அரசு முதன்மைச் செயலாளர் / வணிகவரித்துறை ஆணையர் திரு.எம்.ஏ.சித்திக்,இ.ஆ.ப., வேலைவாய்ப்புத்துறை இயக்குநர் திரு.விரராகவராவ் இ.ஆ.ப., நகர்புற ஊரமைப்புத்துறை இயக்குநர் திரு.பி.கணேஷன் இ.ஆ.ப., பொதுத்துறை அரசு செயலாளர் டாக்டர்.டி.ஜகநாதன்.இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., (கோயம்புத்தூர்) திரு.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., (திருப்பூர்) கோவை மாநகர காவல் ஆணையர் திரு.தீபக் எம்.டாமோர் இ.கா.ப., மேற்கு மண்டல காவல்துறை தலைவர் திரு.ர.சுதாகர் இ.கா.ப., கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம்.இ.கா.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆப., பொது

சுகாதாரம் மற்றும் மருந்துதடுப்பு இயக்குநர் டாக்டர்.டி.எஸ்.செல்வவிநாயகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் திருமதி.கவிதா, சார்ஆட்சியர்கள் திரு.வைத்தியநாதன்,இ.ஆ.ப., (பொள்ளாச்சி) திரு.பவன்குமார் இ.ஆ.ப., (தாராபுரம்) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்:**